[8th November 1966

என்று சர்டிபை செய்ததால் நீதிபதிகள் அப்படிப்பட்டவர்களைத் தண்டிக்கிறார்கள். மதுவிலக்கு அமலில் இருக்கின்ற நேரத்திலே பகிரங்கமாக இதற்கு லைசென்ஸ் வழங்கவேண்டிய அவசியமென்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்திலே ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் ஆல்கஹால் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மதுகாசம் என்ற பெயரினால் மற்ற வற்றைச் சாப்பிடுகிறவர்கள்தான் பிடிக்கப்படுகிறார்கள். அவற்றை யெல்லாம் டாக்டர்கள் ஒப்புக் கொள்வதற்குத் தயாராக இல்லை. ஆகவே குறிப்பிட்ட பர்சன்டேஜ்க்கும் அதிகமாக ஆல்கஹால் இருந்தால் அவர்கள் குற்றம் செய்ததாகக் கருதி அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த மதுகாசத்தினாலே பலவிதக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இருந்தும்கூட அதிகமாக அதை விற்பதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே அதையாவது கட்டுப்படுத்து வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுகாசத்தினாலே பலவித கோளாறுகள் வருகின்றன என்பதை ஒப்புக்கொள்வதற்கு தயாராக இல்லை. மதுகாசம் உபயோகப்படுத்தலாம் என்று அலௌவ் பண்ணித்தான் லைசென்ஸ் கொடுக்கப்படுகிது. மது காசத்திலே pharmaceuticals pure alchohol போன்றவையும் விற்பனை செய்கின்ற காரணத்தினாலே டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சென்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த நடவடிக்கையின் காரணமாகப் பலர் பாதிக்கப்படுகிறார்கள்.

பிச்சைக்கார விடுதி.

*525 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சமீபத்தில் அமுலுக்கு வந்த பிச்சை எடுப்பு தடுப்பு (திருத்த) சட்டத்திற்கு வகை செய்யும் வகையில், பிச்சைக்காரர் களுக்கு விடுதிகள், தொழில் நிலையங்கள் முதலியவற்றை நிறுவு வதற்கு அரசாங்கம் ஆவன செய்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) புதிதாக பிச்சைக் கார விடுதிகள், தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த அவசியம் எழவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பிச்சையெடுப்ப வர்களைத் தடுக்கின்ற சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக் கிறது. ஆனால் அதற்குப் போதுமான முன் நடவடிக்கை எடுக்கப்

8th November 1966]

படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிச்சைக்காரர் தடுப்புச் சட்டத்தினால் பயன் விளையாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிச்சைக்காரர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்தால் கொண்டுபோய் வைப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால் என்ன பிரயோஜனம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்தால் அவர்களுக்காக ஏற்படுத்தி நடத்தப்படும் விடுதிகள் அரசாங்கத் துறையிலே நடத்தப்படுபவை அல்ல. தனிப்பட்டவர்களால்தான் நடத்தப்படுகின்றன. அவர்களை அந்த விடுதிகளிலே கொண்டு வைப்பது கஷ்டமாக இருக்கிறது. பிச்சையெடுக்கின்ற நிலைமையே நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்குத்தான் இந்தச் சட்டம். அந்தச் சட்டத்தின் படித்தான் பாட்டுப் பாடிப் பிச்சையெடுத்தாலும், ஆட்டம் ஆடிப் பிச்சையெடுத்தாலும் எந்தவிதமாகப் பிச்சையெடுத்தாலும் அவர்களை அவ்வப்போது பிடித்துத் தண்டிக்கலாம் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு

*526 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1964–65-ம் ஆண்டில் குடும்ப கட்டுப்பாடு (அறுவை) செய்துக் கொண்டவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள்?

(இ) அவர்களில் இந்துக்கள் எத்தனை பேர்கள்?

(உ) முஸ்லீம்கள் எத்தனை பேர்கள்?

(எ) முனிசிபல் நகரங்களில் எத்தனை பேர்கள் விவரமாக?

(ஐ) கிராமப்புறங்களில் எத்தனை பேர்கள்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) A statement is placed on the table of the House.

(b) & (c) These particulars are not collected at the time of operation.

(d) 10,842.

(e) 19,800.

திரு. எம். எஸ். மணி: சார், இந்தக் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களிலே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்று அறியலாமா?

கனம் சபாநாயகர்: அது எல்லாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டிய விஷயம், வெளியிலே சொல்லலாமா? அறுபது வயதிற்கு மேல் செய்துகொண்டவர்கள் வெளியே சொல்லமாட்டார்கள்.

Printed as Appendix X on page 729-730.